குறிஞ்சிப்பாடியில் நெசவாளர்களுக்கு 28–1–1993–ல் 140 வீடுகளைக் கட்டி மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் திறந்து வைத்தார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிஞ்சிப்பாடியில் 7, 8 இடங்களில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அதில் சிங்கமுனேரி டெக்ஸ் என்ற கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அதிலே கைலிகள்தான் நெய்யப்படுகின்றன. கொசுவலைகளும் நெய்யப்படுகின்றன. அந்தக் கைலிகளை ரிபேட்டில் அளிக்கின்றபோது ஒட்டு மொத்தமாகத் தனி நபர்கள் வாங்கிக் கொண்டு அதை வெளிநாட்டிற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். தற்சமயம் அரசுக்கு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் தமிழக அரசே அதை ஏற்றுக் கொண்டு, அந்த லுங்கிகளைப் பெற்று வெளிநாடுகளுக்கு அந்நியச் செலவாணிக்கு உதவும் வகையில் ஏற்றுமதி செய்ய முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையின் போது புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனைக்கிணங்க ஏஜெண்ட்ஸ்கள் வாயிலாக பிற நாடுகளில் ஏஜென்சிகளுக்குத் தருவதாக உத்தேசிக்கப்பட்டு அதற்கான ஆக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கைத்தறித் துறையின் சார்பிலும், கோ-ஆப்டெக்ஸின் சார்பிலும் தற்போது ஏறத்தாழ 1 கோடி ரூபாய் கைத்தறி ஆடைகளை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். அதிகமாக ஏற்றுமதி செய்வதற்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். மிக விரைவில் குறிஞ்சிப்பாடி போன்ற பகுதிகளில் அதிகமாக உற்பத்தி செய்கின்ற அந்த லுங்கிகளை ஏற்றுமதி செய்வதற்குத் திட்டமிடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

71—

சென்னை மெரினா கடற்கரையிலிருந்து மகாபலிபுரத்திற்கு கடலோரமாக சாலை அமைக்கும் திட்டம்.

*10656—திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மெரினா கடற்கரையில் ஆரம்பித்து கடல் ஓரமாக மகாபலிபுரத்துக்குச் செல்லும் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

1993 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பொதுப் பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மெரினாவிலிருந்து திருவான்மியூர் வரை நல்ல சாலை போக்குவரத்து இருப்பதால் திருவான்மியூர் முதல் கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாடு செய்யப்பட உள்ளது.

(ஆ) அந்தப் பணியினுடைய செயலாக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. எம். கே. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரை ஓரமாக சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா என்று கேட்டிருக்கிறேன். அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையில் ஆரம்பித்து கடல் ஓரமாக மகாபலிபுரத்திற்குச் செல்லும் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பது கேள்வி. ஆகவே மகாபலிபுரம் வழியாக இந்த கிழக்கு கடற்கரைச் சாலை செல்லுகிற காரணத்தினால் கிழக்கு கடற்கரைச் சாலை பற்றி நான் இங்கே குறிப்பிட்டேன். ஆகவே மகாபலிபுரம் செல்லுகின்ற கிழக்கு கடற்கரைச் சாலை பற்றி வருகின்ற காரணத்தினால் நான் இந்தக் கேள்விக்கு இந்த பதிலை அளித்திருக்கிறேன்.

திரு. எம். கே. பாலன்: தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையிலிருந்து மகாபலிபுரத்திற்கு சாலை அமைக்கும் திட்டம் கடந்த 1969 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அடையாறு முகத்துவாரத்திலே ஒரு மிகப் பெரிய பாலம்—மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ரிக்ஷாக்காரன் படத்தில் நடித்ததால், அந்த பிரிட்ஜுக்கு ரிக்ஷாக்காரன் பிரிட்ஜ் என்று பெயர் இருந்தது. அந்த ரிக்ஷாக்காரன் பிரிட்ஜ்—10 வருடங்களாகக் காணவில்லை. அது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையிலிருந்து வேறு வழியாக மகாபலிபுரத்திற்கு சாலை என்றால் அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72. திருமதி ஜெ. லோகாம்பாள், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் சு. மணிமேகலை கேட்கிறார்.—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.